**கவனிக்க** .- 2015.02.06 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

**கவனிக்க** .- 2010.06.28 ஆந் திகதியில் இருந்து 2013.12.31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்கான மிருக வைத்தியர்களின் பெயர்ப்பட்டியலொன்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி VI இல் ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1902 - 2015 පෙබරවාරි මස 13 වැනි සිකුරාදා - 2015.02.13

1902 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 454 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 470 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | 472 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, மாச்சு மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பதவிகள் — வெற்றிடம்

## ஹட்டன் டிக்கோயா நகர சபை

ஹட்டன் டிக்கோயா நகர சபையில் வெற்றிடமாகியுள்ள கீழ்க்காணும் ஆரம்ப நிலை கலையுணர்வின்றிய ஊழியர்களுக்கான விண்ணப்பங்கள் தகுதியான விண்ணப்பதாரர்களிடம் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 01 | காவலாளி | 01 | ரூபா 11,730 -10×120 -10×130 - 10×145- 12 ×160 - ரூபா17,600 (அ. நி. சு. 6/2006 (IV) P.L.1-2006 (A) சம்பள அளவின் 1 ஆம் நிலை ஆரம்ப சம்பள நிலையாகக் கருதப்படும். (4 ஆவது சம்பள நிலையைக் கடக்கும் முன் வினைத்திறமை காண் தடை தாண்டல் உண்டு.) | க. பொ. த. (சா. த.) பரீட்சைகளில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு ஆகக்குறைந்தது இரண்டு பாடங்களில் தகைமை சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அதில் 5 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 02 | வேலைத்தள/ வெளிக்கள (வேலைப் பிரிவு) தொழிலாளி | 08 | ரூபா 11,730 -10×120 -10×130 - 10×145- 12 ×160 - ரூபா17,600 (அ. நி. சு. 6/2006 (IV) P.L.1-2006 (A) சம்பள அளவின் 1 ஆம் நிலை ஆரம்ப சம்பள நிலையாகக் கருதப்படும். (4 ஆவது சம்பள நிலையைக் கடக்கும் முன் வினைத்திறமைகாண் தடை தாண்டல் உண்டு.) | க. பொ. த. (சா. த.) பரீட்சைகளில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு ஆகக்குறைந்தது இரண்டு பாடங்களில் தகைமை சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அதில் 5 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 03 | விளையாட்டு மைதான ஆலோசகர் | 01 | ரூபா 11,730 -10×120 -10×130 - 10×145- 12 ×160 - ரூபா17,600 (அ. நி. சு. 6/2006 (IV) P.L.1-2006 (A) சம்பள அளவின் 1 ஆம் நிலை ஆரம்ப சம்பள நிலையாகக் கருதப்படும். (4 ஆவது சம்பள நிலையைக் கடக்கும் முன் வினைத்திறமைகாண் தடை தாண்டல் உண்டு.) | க. பொ. த. (சா. த.) பரீட்சைகளில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு ஆகக்குறைந்தது இரண்டு பாடங்களில் தகைமை சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அதில் 5 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

**உடல்சார்ந்த தகைமைகள்.-**

சகல விண்ணப்பதாரிகளும் சிறந்த கண்பார்வையுடையோராகவும், போதுமானளவு உடல் மற்றும் உள ரீதியான வலிமைக்கொண்டோராகவும், நல்லொழுக்கமுடையோராகவும் இருத்தல் வேண்டியதுடன், நாட்டின் எல்லா பாகங்களிலும் சேவையாற்றக்கூடிய உகந்த சுகதேகியாக இருத்தல் வேண்டும்.

**ஏனையன.-**

(1) விண்ணப்பதாரி ஹட்டன் டிக்கோயா நகர சபை எல்லைக்குள் கடந்த 3 வருட காலத்திற்குள் நிரந்தரமாக வசித்தவராக இருத்தல் வேண்டும். (வாக்காளர் பெயர் பட்டியல் மூலமாக அல்லது பிரதேச செயலகத்தினால் வழங்கப்படும் சான்றிதழ் மூலமாக வதிவிடத்தை உறுதி செய்தல் வேண்டும்.)

(2) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டியதுடன், விசேட குணநலமுடையவராக இருத்தல் வேண்டும்.

(3) சேவையில் இணைத்துக்கொள்வதற்குத் தேவையான அனைத்து தகுதிகளையும் விண்ணப்பம் கோரப்படும் திகதிக்கு அல்லது அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதிக்கு எல்லா தேவைப்பாடுகளையும் பூரணப்படுத்தியிருக்க வேண்டும்.

(4) விண்ணப்பதாரி குற்றவியல் சட்டக் கோவையின் கீழ் நீதிமன்றம் ஒன்றினால் குற்ற தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவராகவோ அல்லது அரசாங்க மாகாண சேவையில் நீக்கப்பட்டவராகவோ இருக்கக்கூடாது.

(5) விண்ணப்பம் கோரப்பட்ட பின் அல்லது கோரப்பட்ட கால எல்லைக்குள் அல்லது சேர்த்துக் கொள்ள தாமதாவது அல்லது திருத்தப்படுவது அல்லது இவ்வறிவித்தலை நிராகரிப்பது அல்லது திருத்துவது ஹட்டன் டிக்கோயா நகர சபையின் செயலாளருக்குரியதாகும்.

(6) யாதேனும் சந்தர்ப்பத்தில் குறித்த தகுதியினை கொண்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாதவிடத்து ஹட்டன் டிக்கோயா நகர சபையில் தற்போது நிரந்தர/அமைய/பதில்/தற்காலிக/ஒப்பந்த/மதிப்பீடு அடிப்படையில் சேவை செய்யும் விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதுடன், அது சம்பந்தமாக நேர்முகப் பரீட்சை குழுவினால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதித் தீர்மானமாக கருதப்படும்.

(7) ஹட்டன் டிக்கோயா நகர சபை நிர்வாக எல்லைக்குள் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமாக தேர்ந்தெடுக்கப்பட்ட தகைமை பெற்ற விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அண்மித்த உள்ளூராட்சி மன்ற நிர்வாக எல்லைக்குள் வசிப்பவர்களிடம் விண்ணப்பங்கள் கோருவதற்கு சபையின் செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

**வயது**.-

ஆகக்குறைந்தது : 18 வருடங்கள்
ஆகக்கூடியது : 45 வருடங்கள்
(குறித்த உள்ளூராட்சி மன்றங்களின் சேவையில் ஈடுபட்டுள்ள நிரந்தர பதவியை வகிப்போர் சம்பந்தமாக உயரிய வயதெல்லை தாக்கம் லுெத்தப்படமாட்டாது.)

**சேவையில் இணைத்துக்கொள்ளும் முறை**.-

* நேர்முகப் பரீட்சை கட்டமைப்பில் பெற்றுக்கொள்ளப்படும் புள்ளிகளின் தொடர் அமைப்பிற்கு ஏற்றவாறு நிலவுகின்ற வெற்றிடங்களுக்காக நியமனம் வழங்கப்படும்.
* நேர்முக பரீட்சை கட்டமைப்பில் புள்ளிகள் வழங்கப்படும் பிரதான துறை :

| | |
|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 40 |
| அனுபவம் | 55 |
| நேர்முகப் பரீட்சையின் போது காண்பிக்கப்படும் திறமைகள் | 05 |

**சேவை நிபந்தனைகள்**.-

(1) இப்பதவிகள் நிரந்தரமானது. ஓய்வூதியம் உள்ளது.

(2) விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதிக்கு பங்குப் பணம் செலுத்துதல் வேண்டும்.

(3) பதிவுகள் 3 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவதுடன் 3 வருட இறுதியில் சேவை, வருகை, ஒழுக்கம் உயர் நிலையில் இருக்கும் சேவையாளர்களுக்கு மாத்திரம் பதவி நிரந்தரமாக்கப்படும்.

(4) III ஆம் நிலைக்கு இணைத்துக்கொண்டு மூன்று வருடங்கள் நிறைவு பெறுவதற்கு முன் முதலாவது தடைகாண் பரீட்சையிலும், II ஆம் நிலைக்கு பதவியுயர்வு பெற்றுக்கொண்டு மூன்று வருடங்கள் நிறைவு பெறுவதற்கு முன் இரண்டாம் தடைகாண் பரீட்சையிலும், I ஆவது நிலைக்கு பதவியுயர்வு பெற்றுக்கொண்டு ஐந்து வருடங்கள் நிறைவு பெறுவதற்கு முன் மூன்றாவது தடைகாண் பரீட்சையிலும் சித்திபெறுதல் வேண்டும்.

(5) அரச மொழியல்லாத மொழி மூலம் சேவையில் இணைந்துகொண்ட அலுவலர் ஒருவரினால் தகுதிகாண் காலத்திற்குள் முறையாக அரச மொழியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டியதுடன், அரச நிர்வாக சுற்றறிக்கை இல. 01/2014 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒவ்வொரு பதவிக்கும் நியமனத் திகதியிலிருந்து ஐந்து வருடங்களுக்குள் தேவையான ஏனைய அரச மொழியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு தகைமைகளைப் பூர்த்தி செய்யத் தவறும் நபர்களுடைய சம்பள நிலை நிறுத்தி வைக்கப்படும்.

(6) இச்சேர்த்துக்கொள்ளல் இலங்கை குடியரசின் தபானக் கோவையின் சட்டத்திட்டங்களுக்கும் நிதிப்பிரமாணங்களுக்கும், திணைக்கள கட்டளைகளுக்கும் அரச அல்லது மத்திய மாகாண சபையினால் அவ்வப்போது வெளியிடப்படும் ஏனைய சட்டங்கள் கட்டளைகளுக்கு அமைய செயல்பட சகல சேவையாளர்களும் உடன்பட்டிருத்தல் அவசியம்.

**விண்ணப்பம் கோரப்படும் முறை**.- விண்ணப்பதாரர் இங்கு குறிப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் படி A4 அளவிலான கடதாசியில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 04.03.2015 ஆந் திகதிக்கோ அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் "செயலாளர், ஹட்டன் டிக்கோயா நகர சபை, ஹட்டன்" என்ற முகவரிக்கு பதிவு தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி "..............." என்று குறிப்பிடல் வேண்டும். பூர்த்தியற்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பம் கோரப்பட்ட பின் அல்லது கோரப்பட்ட கால எல்லைக்குள் அல்லது சேர்த்து கொள்ள

தாமதாவது அல்லது திருத்தப்படுவது அல்லது இவ் அறிவித்தலை நிராகரிப்பது அல்லது திருத்தப்படுவது போன்ற முழு அதிகாரமும் ஹட்டன் டிக்கோயா நகர சபையின் செயலாளருக்குரியதாகும்.

* விண்ணப்பப்படிவத்துடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்பவேண்டியதுடன், மூலப் பிரதிகள் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) கல்விச் சான்றிதழ்கள் ;
(iii) அண்மையில் பெற்றுக்கொண்ட கிராம அலுவலர் சான்றிதழ் (பிரதேச செயலாளரினால் சான்றுபடுத்தப்பட்டிருக்க வேண்டும்) ;
(iv) அண்மையில் பெற்றுக்கொண்ட இரண்டு நன்னடத்தை சான்றிதழ் ;
(v) ஏனைய தகைமைகளை குறிப்பிடும் சான்றிதழ்கள் ;
(vi) சேவை அனுபவம் சம்பந்தமான சான்றிதழ்கள்.

எஸ். பிரியதர்ஷினி,
செயலாளர்,
ஹட்டன் டிக்கோயா நகர சபை.

நகர சபை அலுவலகம்,
ஹட்டன் டிக்கோயா நகர சபை,
2015, சனவரி 20.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**ஹட்டன் டிக்கோயா நகர சபை**

................................ பதவிக்கான விண்ணப்பப்படிவம்

1. விண்ணப்பதாரரின் பெயர் (முதலெழுத்துக்களுடன் பெயர்) :----.
2. முதலெழுத்துக்கள் குறிப்பிடப்படும் பெயர் :----.
3. அஞ்சல் முகவரி :----.
4. தொலைபேசி இலக்கம் :-----.
5. பிறந்த திகதி:
   வருடம் :----, மாதம் :----, திகதி :----.
6. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
7. விண்ணப்பத்தை பொறுப்பேற்கும் இறுதித் திகதியில் வயது :
   வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
8. ஆண்/பெண் விபரம் :-----.
9. விவாகமானவரா/விவாகமாகாதவரா :----.
10. இனம் :----.
11. நீங்கள் இலங்கை பிரசையா? அவ்வாறாயின் பரம்பரையில் அல்லது பதிவு செய்ததின் பிரகாரமா? :----.
12. கல்வி தகைமைகள் :----.
13. தொழில் பயிற்சி அனுபவம் :----.
14. நீங்கள் தற்போது நுவரெலியா பிரதேச சபையில் சேவை செய்பவராயின் :----.
    (i) தற்போது வகிக்கும் பதவி :----.
    (ii) அப்பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :----.
    (iii) அப்பதவியின் தன்மை (நிரந்தர/அமைய/தற்காலிக/பதில்/ஒப்பந்த/மதிப்பீடு/அடிப்படையிலா? :----.
15. நீங்கள் எப்போதாவது அல்லது குற்றச்சாட்டுக்காக நீதிமன்றத்தில் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவரா? :----.

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விடயங்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் சரியானவை என என்மீது ஆணையாக வெளிப்படுத்துகின்றேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏதேனும் பிழையானதென இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கும் முன் தெரிய வந்தால் நான் தகுதி அற்றவர் எனவும், நியமனம் கிடைத்தபின் அவ்வாறான விடயம் நிரூபிக்கப்பட்டால் எவ்வித நட்டஈடும் இன்றி பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுவேன் என நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**தற்போது அரச சேவையில் இருக்கும் விண்ணப்பதாரர்களுக்கான நிர்வாக அதிகாரியின் சான்றிதழ்**

அவ்விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி ......................................... இந்நிறுவனத்தில் .................... ஆக சேவையில் உள்ளார். இப்பதவிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர் இச்சேவையில் இருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் அவர் எவ்வித தண்டனைக்கும் உட்படவில்லை என இத்தால் உறுதிப்படுத்துவதுடன் விண்ணப்பப்படிவத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன்.

------,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
பதவிக்கான முத்திரை :----.

2-250/1

---

**ஹட்டன் டிக்கோயா நகர சபை**

ஹட்டன் டிக்கோயா நகர சபையில் வெற்றிடமாகியுள்ள கீழ்க்காணும் ஆரம்ப நிலை பகுதி கலையுணர்வுடன்கூடிய ஊழியர்களுக்கான விண்ணப்பங்கள் தகுதியான விண்ணப்பதாரர்களிடம் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 01 | மருந்து கலவையாளர் | 01 | ரூபா 12,210 -10×130 -10×145 - 10×160- 12 ×170 - ரூபா18,600 (அ. நி. சு. 6/2006 (IV) P.L.2-2006 (A) சம்பள அளவின் 1 ஆம் நிலை ஆரம்ப சம்பள நிலையாகக் கருதப்படும். (4 ஆவது சம்பள நிலையைக் கடக்கும் முன் வினைத்திறமை காண் தடை தாண்டல் உண்டு.) | க.பொ.த.(சா.த.) பரீட்சையில் அல்லது தேசிய கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட ஆகக்குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

**பொதுவான தகைமைகள்.-**

(1) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(2) விண்ணப்பதாரி ஹட்டன் டிக்கோயா நகர சபையின் எல்லைக்குள் தொடர்ந்து 3 வருட காலத்திற்குள் நிரந்தரமாக வசித்தவராக இருத்தல் வேண்டும். (வாக்குரிமை பெயர் பட்டியல் மூலமாக அல்லது பிரதேச செயலகத்தில் வழங்கப்பட்ட சான்றிதழ் மூலம் வதிவிடத்தை உறுதி செய்தல் வேண்டும்.)

(3) நன்னடத்தையுடன் கூடியதாகவும், நாட்டின் எந்தவொரு பகுதியிலும் கடமையாற்றக்கூடிய உகந்தவாறு சுகதேகியாக இருத்தல் வேண்டும்.

(4) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது 18 வருடங்களுக்குக் குறையாமலும், 45 வருடங்களுக்கு மேற்படாதவாறும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச சேவையிலோ அல்லது ஏதேனும் மாகாண சபை அரச சேவையில் ஈடுபட்டிருப்போருக்கு வயதெல்லை வரையறுக்கப்படமாட்டாது.)

(5) ஹட்டன் டிக்கோயா நகர சபை நிர்வாக எல்லைக்குள் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமாக தேர்ந்தெடுக்கப்பட்ட தகைமை பெற்ற விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அண்மித்த உள்ளூராட்சி மன்ற நிர்வாக எல்லைக்குள் வசிப்பவர்களிடம் விண்ணப்பங்கள் கோருவதற்கு சபையின் செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

(6) விண்ணப்பதாரி குற்றவியல் சட்டக் கோவையின் கீழ் நீதிமன்றம் ஒன்றினால் குற்ற தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவராகவோ அல்லது அரசாங்க மாகாண சேவையில் நீக்கப்பட்டவராகவோ இருக்கக்கூடாது.

(7) விண்ணப்பம் கோரப்பட்ட பின் அல்லது கோரப்பட்ட கால எல்லைக்குள் அல்லது சேர்த்துக் கொள்ள தாமதாவது அல்லது திருத்தப்படுவது அல்லது இவ்வறிவித்தலை நிராகரிப்பது அல்லது திருத்துவது ஹட்டன் டிக்கோயா நகர சபையின் செயலாளருக்குரியதாகும்.

(8) யாதேனும் சந்தர்ப்பத்தில் குறித்த தகுதியினை கொண்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாதவிடத்து ஹட்டன் டிக்கோயா நகர சபையில் தற்போது நிரந்தர/அமைய/பதில்/தற்காலிக/ஒப்பந்த/மதிப்பீடு அடிப்படையில் சேவை செய்யும் விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதுடன், அது சம்பந்தமாக நேர்முகப் பரீட்சை குழுவினால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதித் தீர்மானமாக கருதப்படும்.

**கலை நிபுணத்துவம்/விசேட ஆற்றல்.-**

1. குறித்த பதவிக்கு முறையான தொழில்நுட்ப நிபுணத்துவம் நியமன அதிகாரியினால் எதிர்பார்க்கப்படும் தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.

   * தொழிலுக்கு அமைவாக தேசிய தொழில் தகைமையின் 2 ஆம் நிலை (NVQ2) அல்லது 3 ஆம் நிலை (NVQ3) சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

   அல்லது

   * தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தினால் (DTET) தொழிலுக்கு அமைவாக ஒரு வருடத்திற்குக் குறையாத பாடநெறியொன்றை பயின்று சான்றிதழ் பெற்றிருத்தல்.

   அல்லது

   * தேசிய இளைஞர் சேவைகள் சங்கத்தினால் (NYSC) தொழிலுக்கு அமைவாக ஒரு வருடத்திற்குக் குறையாத பாடநெறியொன்றை பயின்று சான்றிதழ் பெற்றிருத்தல்.

   * இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால் (VTA) தொழிலுக்கு அமைவாக ஒரு வருடத்திற்குக் குயைாத பாடநெறியொன்றை பயின்று சான்றிதழ் பெற்றிருத்தல்.

   * தேசிய பயிலுநர் மற்றும் தொழிற்பயிற்சி திணைக்களத்தினால் (NAITA) தொழிலுக்கு அமைவாக ஒரு வருடத்திற்குக் குறையாத பாடநெறியொன்றை பயின்று சான்றிதழ் பெற்றிருத்தல் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்ட தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் தொழிலுக்கு அமைவாக ஒரு வருடத்திற்குக் குறையாத பாடநெறியொன்றை பயின்று சான்றிதழ் பெற்றிருத்தல்.

**அனுபவம்.-**

* குறித்த துறையில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். (பயிற்சிக் காலத்துடன் ஆகக்குறைந்தது 02 வருடங்களாவது அமைதல் வேண்டும்.)

**சேவையில் இணைத்துக்கொள்ளும் முறை.-**

(1) நேர்முகப் பரீட்சையின் பின்னர் தேர்ந்தெடுக்கப்படும்

(2) குறித்த தகைமைகளைப் பெற்றுக்கொண்டுள்ளோர்களை மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

**சேவை நிபந்தனைகள்.-**

(1) இப்பதவிகள் நிரந்தரமானது. ஓய்வூதியம் உள்ளது.

(2) விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதிக்கு பங்கு பணம் செலுத்துதல் வேண்டும்.

(3) பதிவுகள் 3 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவதுடன் 3 வருட இறுதியில் சேவை, வருகை, ஒழுக்கம் உயர் நிலையில் இருக்கும் சேவையாளர்களுக்கு மாத்திரம் பதவி நிரந்தரமாக்கப்படும்.

(4) III ஆம் நிலைக்கு இணைத்துக்கொண்டு மூன்று வருடங்கள் நிறைவு பெறுவதற்கு முன் முதலாவது தடைகாண் பரீட்சையிலும், II ஆம் நிலைக்கு பதவியுயர்வு பெற்றுக்கொண்டு மூன்று வருடங்கள் நிறைவு பெறுவதற்கு முன் இரண்டாம் தடைகாண் பரீட்சையிலும், I ஆவது நிலைக்கு பதவியுயர்வு பெற்றுக்கொண்டு மூன்று வருடங்கள் நிறைவு பெறுவதற்கு முன் மூன்றாவது தடைகாண் பரீட்சையிலும் சித்திபெறுதல் வேண்டும்.

(5) அரச மொழியல்லாத மொழி மூலம் சேவையில் இணைந்துகொண்ட அலுவலர் ஒருவரினால் தகுதிகாண் காலத்திற்குள் முறையாக அரச மொழியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டியதுடன், அரச நிர்வாக சுற்றறிக்கை இல. 01/2014 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒவ்வொரு பதவிக்கும் நியமனத் திகதியிலிருந்து ஐந்து வருடங்களுக்குள் தேவையான ஏனைய அரச மொழியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு தகைமைகளைப் பூர்த்தி செய்யத் தவறும் நபர்களுடைய சம்பள நிலை நிறுத்தி வைக்கப்படும்.

**விண்ணப்பம் கோரப்படும் முறை.-** விண்ணப்பதாரர் இங்கு குறிப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் படி A4 அளவிலான கடதாசியில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 04.03.2015 ஆந் திகதிக்கோ அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் செயலாளர், ஹட்டன் டிக்கோயா நகர சபை, ஹட்டன் என்ற முகவரிக்கு பதிவு தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி "................" என்று குறிப்பிடப்படல் வேண்டும். பூர்த்தியற்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பம் கோரப்பட்ட பின் அல்லது கோரப்பட்ட கால எல்லைக்குள் அல்லது சேர்த்து கொள்ள தாமதமாவது அல்லது திருத்தப்படுவது அல்லது இவ் அறிவித்தலை நிராகரிப்பது அல்லது திருத்துவது போன்ற முழு அதிகாரமும் ஹட்டன் டிக்கோயா நகர சபையின் செயலாளருக்குரியதாகும்.

* விண்ணப்பப்படிவத்துடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்பவேண்டியதுடன், மூலப் பிரதிகள் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) கல்விச் சான்றிதழ்கள் ;
(iii) அண்மையில் பெற்றுக்கொண்ட கிராம அலுவலர் சான்றிதழ் (பிரதேச செயலாளரினால் சான்றுப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்);
(iv) அண்மையில் பெற்றுக்கொண்ட இரண்டு நன்னடத்தை சான்றிதழ் ;
(v) ஏனைய தகைமைகளை குறிப்பிடும் சான்றிதழ்கள் ;
(vi) சேவை அனுபவம் சம்பந்தமான சான்றிதழ்கள்.

எஸ். பிரியதர்ஷினி,
செயலாளர்,
ஹட்டன் டிக்கோயா நகர சபை.

நகர சபை அலுவலகம்,
ஹட்டன் டிக்கோயா நகர சபை,
2015, சனவரி 20.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**ஹட்டன் டிக்கோயா நகர சபை**

................................ பதவிக்கான விண்ணப்பப்படிவம்

1. விண்ணப்பதாரரின் பெயர் (முதலெழுத்துடன் பெயர்) :----.
2. முதலெழுத்து குறிப்பிடப்படும் பெயர் :----.
3. அஞ்சல் முகவரி :----.
4. தொலைபேசி இலக்கம் :-----.
5. பிறந்த திகதி:
   வருடம் :----, மாதம் :----, திகதி :----.
6. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
7. விண்ணப்பத்தை பொறுப்பேற்கும் இறுதித் திகதியில் வயது :
   வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
8. ஆண்/பெண் விபரம் :-----.
9. விவாகமானவரா/விவாகமாகாதவரா :----.
10. இனம் :----.
11. நீங்கள் இலங்கை பிரசையா? அவ்வாறாயின் பரம்பரையிலா? அல்லது பதிவு செய்ததின் பிரகாரமா? :----.
12. கல்வி தகைமைகள் :----.
13. தொழில் பயிற்சி அனுபவம் :----.
14. நீங்கள் தற்போது நுவரெலியா பிரதேச சபையில் சேவை செய்பவராயின் :----.
    (i) தற்போது வகிக்கும் பதவி :----.
    (ii) அப்பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :----.
    (iii) அப்பதவியின் தன்மை (நிரந்தர/அமைய/தற்காலிக/பதில்/ஒப்பந்த/மதிப்பீடு/அடிப்படையிலா?) :----.
15. நீங்கள் எப்போதாவது அல்லது குற்றச்சாட்டுக்காக நீதிமன்றத்தில் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவரா? :----.

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விடயங்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் சரியானவை என என்மீது ஆணையாக வெளிப்படுத்துகின்றேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏதேனும் பிழையானதென இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கும் முன் தெரிய வந்தால் நான் தகுதி அற்றவர் எனவும், நியமனம் கிடைத்தபின் அவ்வாறான விடயம் நிரூபிக்கப்பட்டால் எவ்வித நட்டஈடும் இன்றி பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுவேன் என நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**தற்போது அரச சேவையில் இருக்கும் விண்ணப்பதாரர்களுக்கான நிர்வாக அதிகாரியின் சான்றிதழ்**

அவ்விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி ......................................... இந்நிறுவனத்தில் ................... ஆக சேவையில் உள்ளார். இப்பதவிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர் இச்சேவையில் இருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் அவர் எவ்வித தண்டனைக்கும் உட்படவில்லை என இத்தால் உறுதிப்படுத்துவதுடன் விண்ணப்பப்படிவத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன்.

------,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
பதவிக்கான முத்திரை :----.

2-250/2

---

**வத்தேகம நகர சபை**

மத்திய மாகாண சபை அரச சேவையில் வத்தேகம நகர சபைக்கு சாரதி/தண்ணீர் தொழிலாளி/மின்சார கம்பியாளர் பதவிகளுக்கு ஆட்சேர்த்தல்

மத்திய மாகாண அரச சேவையில் வத்தேகம நகர சபையில் வெற்றிடமாகியுள்ள கீழ் காணப்படும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக இவ்விளம்பரத்தில் காணப்படும் தகுதிகளுடைய வத்தேகம நகர சபை, பாததும்பர மற்றும் பன்னல பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தரமாக வாழ்பவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்விளம்பரத்தில் இறுதியில் காணப்படும் விண்ணப்பப் படிவத்திற்கமைய வடிவமைக்கப்பட்ட விண்ணப்பம் 2015.03.04 ஆந் திகதிக்கு முன் "செயலாளர், வத்தேகம நகர சபை, வத்தேகம" எனும் முகவரிக்கு கிடைக்கக் கூடியவகையில் பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிக்கப்படவேண்டும். (வத்தேகம நகர சபையில் தற்போது அமைய/நிரந்தர வேலை பார்ப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.)

| பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|
| 1. சாரதி- III ஆம் வகுப்பு | 02 | 06/2006 IV PL 3 ரூபா 12,470-130X 10-145X10-160X10-170X10-ரூபா 18,860 | க. பொ. த. (சா/த) பரீட்சையில் இரு முறைக்கு மேலல்லாத அமர்வில் சிங்களம்/தமிழ் பாடம் உட்பட குறைந்தது 2 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br><br>மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் வெளியிடப்பட்ட C, C1, D, D1 பிரிவுடைய வாகன ஓட்டும் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்க வேண்டும்.<br>அத்துடன்<br>பகல் நேரத்தில், மற்றும் இரவு நேரத்தில் சேவையாற்று வதற்கான தேக ஆரோக்கியமும் அத்துடன் கண்பார்வை சிறப்பாக இருப்பது அவசியம்.<br>அத்துடன்<br>மோட்டார் வாகனம் ஓட்டும் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டதன் பின் குறைந்தது 3 வருட பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும். (பத்திரம் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)<br>அத்துடன்<br>ஆகக்குறைந்தது 62.5 அங்குலம் உயரமுடையவராக இருக்க வேண்டும். |

| பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|
| 2. தண்ணீர் தொழிலாளி | 02 | 06/2006 IV PL 1 ரூபா 11,730-120X 10-130X10-145X10-160X10-ரூபா 17,600 | க. பொ. த. (சா/த) பரீட்சையில் இரு முறைக்கு மேலல்லாத அமர்வில் சிங்கள/தமிழ் மொழி, கணித பாடத்துடன் குறைந்தது 6 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |
| 3. மின்சுடலை இயக்குனர் | 01 | 06/2006 IV PL 2 ரூபா 12,210-130X 10-130X10-145X10-160X10-170X12-ரூபா 18,600 | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு முறைக்கு மேலல்லாத அமர்வில் சிங்களம்/தமிழ் பாடம் உட்பட குறைந்தது 2 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br>தொழில் சம்பந்தமான தேர்ச்சிக்குரிய சான்றிதழ்களை உடைய விண்ணப்பதாரி பற்றி கூடிய கவனம் செலுத்தப்படும். |
| 4. மின்சுடலை இயக்க உதவியாளர் | 01 | 06/2006 IV PL 3 ரூபா 12,470-130X 10-145X10-160X12-ரூபா 17,600 | க. பொ. த. (சா/த) பரீட்சையில் இரு முறைக்கு மேலல்லாத அமர்வில் சிங்கள/தமிழ் பாடம் உட்பட குறைந்தது 2 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |

**சாரதி பதவிக்கு ஆட்சேர்ப்பிற்கான பொது நியதிகள் .-**

* தகுதி பெற்ற விண்ணப்பதாரிகள் எழுத்து மூலப் பரீட்சைக்கு சமூகமளிக்க வேண்டும்;
* எழுத்து மூலப் பரீட்சையில் சித்தி பெறுபவர்கள் நியமனத்திற்கு முன் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் மோட்டார் வாகன பரீட்சகர் அல்லது பொலிஸ் வாகன பிரிவின் அலுவலர் ஒருவருடன் கூடிய மூன்று பேரடங்கிய குழுவினரால் நடாத்தப்படும் வாகனஓட்டும் திறமையைப் பரீட்சிக்கும் பரீட்சையில் சித்திபெறவேண்டும் ;
* சேவைக்கு ஆட்சேர்ப்பது உரிய உள்ளூராட்சிமன்ற சபை நியமன அதிகாரி மூலம் நடைபெறும்.

**ஏனைய பதவிகளுக்கான ஆட்சேர்ப்பிற்கான பொது நியதிகள்.-**

* மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் பெயர் குறிப்பிடப்பட்ட நபர்கள் உள்ளடங்கிய குழுவினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சை மூலம் நேர்முகப் பரீட்சை பெறுபேறுகளுக்கமைய ஆட்சேர்க்கப்படும்.

**சேவையில் நியமிப்பதற்கான பொது நியதிகள்.-**

* இப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் உடையது. விதவை/தபுதாரன்/அநாதைகள் ஓய்வூதிய முறையில் அங்கத்துவம் பெற வேண்டும்.
* அவ்வாறே அரச சேவை நியமனத்திற்குரிய மற்றைய நியதிகளுக்கும் கட்டுப்பட வேண்டும் ;
* நியமிக்கப்படுபவர்கள் 3 வருட நன்னடத்தைக் காலத்திற்கு உள்ளடங்குவதுடன், அக்காலத்திற்குள் வேலை, நடத்தை, வரவு மகிழ்ச்சிக்குரிய முறையில் இல்லாவிடின் பதவியிலிருந்து அகற்றப்படலாம்.
* பகல் நேரத்தில், மற்றும் இரவு நேரத்தில் சேவையாற்றுவதற்கான தேக சுகாதாரம் அத்துடன் கண்பார்வை சிறப்பாக இருப்பது அவசியம்.
* ஆட்சேர்ப்பிற்கு அவசியமான தகுதிகள் விண்ணப்பம் கோருவதற்கான அறிவித்தல்/வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகுதிகளும் குறிப்பிட்டுள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருக்க வேண்டும்.

**வேறு பொது நியதிகளும்.-**

* இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும். விண்ணப்பதாரி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று உரிய நகர சபை எல்லைக்குள்/பிரதேச சபை எல்லைக்குள் 03 வருடத்திற்கு குறையாத கால நிரந்தர பதிவைக் கொண்டவராக இருக்க வேண்டும். (பதிவுதேர்தல் வாக்குப்பதிவேட்டின் மூலமோ, பிரதேச செயலாளரின் அத்தாட்சிப் பத்திரம் மூலமோ உறுதிப்படுத்தப்பட வேண்டும்);

* விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும், 45 வயதிற்கு மேற்படாத வராகவும் இருத்தல் வேண்டும். எனினும் ஏற்கனவே அரச சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வுச்ச வயதெல்லை ஏற்புடையதன்று ;

* விண்ணப்பதாரிகள் வம்சா வழி மூலம், அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும் ;

* நன்னடத்தையுடன் சிறந்த தேகாரோக்கியம் உடையவராக இருக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்டால் ஒரு மாதத்திற்குள் அரசவைத்தியரினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சைக்கு உட்பட்டு, அதில் தேகாரோக்கியத்தில் சிறந்தவராக தேர்ந்தெடுக்கப்படாவிடின் பதவியில் இருந்து நீக்கப்படும் ;

* குற்றவியல் வழக்கில் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டவராக இல்லாதிருத்தல் ;

* அரசசேவையில் அல்லது மாகாண சேவையில் சேவை இழிவுக்கு உட்பட்டிள்ளாதவராகவும், அரச சுற்றறிக்கை 44/90 யின் கீழ் ஓய்வூதியம் பெறாதவராகவும் இருக்க வேண்டும் ;

* அரசசேவையில் அல்லது மாகாண சேவையில் உள்ளவர்கள் விண்ணப்பிக்கும் இறுதித் திகதிக்கு முந்திய 5 வருட காலப்பகுதிக்குள் குற்றத்திற்கு (முன்னெச்சரிக்கை அல்லாது) தண்டனை பெறாதவராகவும், உரிய சம்பள ஏற்றத்தை உரிய திகதியில் பெற்றவராகவும் கொண்ட மகிழ்ச்சிகரமான சேவைக் காலத்தைக் கொண்டிருக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்டால் விதவை, தபுதாரன், அநாதை ஓய்வூதியத் திட்டத்தில் தொடர்ந்தும் அங்கத்தவராக இருக்க வேண்டும் ;

* வேறு நியதி அமைப்புத் திட்டங்களுக்கு அமைய விண்ணப்பதாரி முப்படை அல்லது பாதுகாப்பு சேவையில் இருந்தால் முறைப்படி சேவையிலிருந்து விலகியவராக இருக்க வேண்டும். (உரிய கடிதங்களின் மூலப்பிரதி சமர்ப்பிக்கப்பட வேண்டும் ;

* இந்த நியமன நியதியும், கொள்கைகளுக்கும் மேலதிகமாக இலங்கைக் குடியரசின் தாபனக் கோவையின் நியதிகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்கள ஏற்பாடுகளுக்கும் மத்திய மாகாண சபை, வத்தேகம நகர சபையினால் காலத்திற்குகாலம் வெளியிடப்படும் நியதி, ஏற்பாடுகளுக்கு ஏற்ப சேவை செய்ய கடமைப்பாடும் உள்ளது ;

* இந்த ஆட்சேர்ப்பு அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும் வத்தேகம நகர சபை செயலாளரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும் ;

* தற்போது அரச சேவையிலிருக்கும் விண்ணப்பதாரிகள் தமது திணைக்களத் தலைவரினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.

**விண்ணப்பிக்க வேண்டிய முறை.-**
இவ்வறிவித்தலில் உள்ள விண்ணப்பத்தை சரியாக பூரணப்படுத்தி கீழ் காணப்படும் அத்தாட்சிப் பத்திரங்களின் பிரதிகளை இணைத்து 2015.03.04 ஆந் திகதிக்கு முன் எனக்கு கிடைப்பதற்கு அனுப்பி வைக்க வேண்டும் :

(1) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;
(2) கல்வி அத்தாட்சிப்பத்திரம் ;
(3) வசிப்பதை உறுதிசெய்வதற்கான பிரதேச செயலாளரின் அத்தாட்சிப்பத்திரம் ;
(4) அண்மையில் பெற்றுக்கொண்ட நன்னடத்தை அத்தாட்சிப்பத்திரம்.

செயலாளர்,
வத்தேகம நகர சபை,
வத்தேகம.

2015, சனவரி 22.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மத்திய மாகாண அரசசேவை .................... பதவிக்கு இணைத்துக் கொள்ளல்**

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.

2. முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர்கள் :----.

3. நிரந்தர முகவரி :----.

4. நிரந்தர வசிப்பிட மாவட்டம் :----.

5. தேசிய ஆள்அடையாள அட்டை இல. :----.

6. பிறந்த திகதி :----.

7. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :----.

8. ஆண்/பெண் :----.

9. திருமணமானவரா/திருமணமாகதவரா ? :----.

10. இலங்கைப் பிரசையாவது பிறப்பின் மூலமா? பதிவின் மூலமா ? :----.

11. கல்வித் தகைமைகள் :- (பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்)

க. பொ. த. (சா/த) பரீட்சை

வருடம் :- சுட்டெண் :-

| பாடம் | தேர்ச்சி | பாடம் | தேர்ச்சி |
|---|---|---|---|
| | | | |

12. வேறு கல்வித் தகைமைகள் :-----.

13. தொழிற் தகைமைகள் :-----.

14. சேவை அனுபவம் :----.

15. நீங்கள் இப்போதும் இந்த நகர சபையில் சேவையாற்றுபவராக இருந்தால் பதவி :----.

16. நிரந்தர/தற்காலிக/அமைய/ஒப்பந்த அடிப்படையிலா:----.

17. பதவியில் இணைந்த திகதி :----.

18. நீங்கள் எப்போதாவது நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா? :----.

ஆம் எனின் அது சம்பந்தமான விபரங்கள்

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**தற்போது அரச சேவையில் கடமையாற்றும் விண்ணப்பதாரர்களுக்கு திணைக்களத் தலைவரது சான்றுரை**

திரு./திருமதி/செல்வி ........................................ என்பவர் இந்த திணைக்களத்தில் ................. இந்தப் பதவியில் கடமையாற்றுகின்றார் எனவும், இவர் இந்தப் பதவிக்கு தெரிவுசெய்யப்படுவாராயின் தற்போதைய பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் இவர் எந்தவித ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் (எச்சரிக்கை தவிர்ந்த) ஆளாகாதவர் எனவும் இத்தால் உறுதிப்படுத்துவதுடன் விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----.
(பதவிமுத்திரை இடப்படவேண்டும்)

2-251

**மாத்தறை பிரதேச சபை**

*மாத்தறை பிரதேச சபையில் வெற்றிடமாகியுள்ள கீழே காட்டப்பட்டுள்ள பதவிகள் தொடர்பாக ஆட்சேர்ப்பதற்கு தகுதிகள் வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.*

| *தொடர் இலக்கம்* | *பதவிப் பெயர்* | *வெற்றிடம்* | *மாதாந்த சம்பள அளவு* | *குறைந்தளவிலான கல்வித் தகைமைகள்* | *பொதுத் தகைமைகள்* |
|---|---|---|---|---|---|
| 1 | வேலை/வெளிக்கள நிருவாகத்தர் | 01 | பொ. நி. சு. அ. இல. 6/2006 இன்படி M.N. 1-2006-A | க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் | * இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும். * நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும். |
| 2 | சுகாதார நிருவாகி | 01 | பொ. நி. சு. அ. இல. 6/2006 இன்படி M.N. 1-2006-A | க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் | விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு குறைந்தளவில் தென் மாகாணத்தினுள் 3 வருட காலமாக நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும். |
